REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

ஒருவரே இரு சபைகளில் உறுப்பினராக இருக்கலாமா?

சென்னை, மார்ச் 5—

இந்திய அரசியல் சட்டப்படி எவரும் பாராளுமன்றம், மாநில சட்டசபை ஆகிய இரண்டில் ஏதாவதொன்றில் மட்டுமே உறுப்பினராக வேண்டும்.

இப்பொழுது ஒரு சபையின் உறுப்பினராக இருப்பவர் வேறொரு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவாரானால், தாம் எந்த சபையில் நீடித்திருக்க விரும்புகிறார் என்பதை, கெசட்டில் தேர்தல் முடிவு பிரசுரமான தேதியிலிருந்து 18 நாட்களுக்குள் தேர்

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 4] சென்னை: மாசி 22உ செவ்வாய் (5—3—57) ★ ★ வெளியூர்: மாசி 23உ புதன் (6—3—57) [இதழ் 229

தி.மு.கழக வெற்றி முழக்கம்

திருவண்ணாமலையில் நமது அபேட்சகர் வெற்றி

மக்கள் சபைத் தொகுதி தேர்தல் முடிவு

சென்னை, மார்ச் 5—

தி. மு. கழக அபேட்சகர்களின் வெற்றிப் பட்டியல் நேற்றுத் துவங்கிற்று. நேற்று வெளிவந்த முடிவுகளில் சட்டசபைக்கு நமது அபேட்சகர்களில் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இன்று திருவண்ணாமலை மக்கள் சபைத் தொகுதியில் நமது அபேட்சகர் வெற்றி முரசு கொட்டியிருக்கிறார்.

திருவண்ணாமலை மக்கள் சபைத் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. கழக அபேட்சகர் தருமலிங்கம் அவர்கள், எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகரை விட 600 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார்.

திருவண்ணாமலை சட்டசபைத் தொகுதியில் போட்டியிட்ட நமது அபேட்சகர்கள் ப. உ. சண்முகம், சந்தானம் ஆகியோரது வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன !

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் இன்று பகல் 12 மணிக்குத் தரப்பட்ட கணக்குப்படி, இதர அபேட்சகர்களைவிட சுமார் 1,000 ஓட்டுகள் அதிகம் பெற்றுள்ளார். விவரங்கள் நாளை தரப்படும்.

சென்னையில் எம். ஜி. ராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

மார்ச் 5:
மாலை 5 மணி: தியாகராயநகர்
„ 5-30: கோடம்பாக்கம்
„ 6-15: ஆயிரம்விளக்கு
இரவு 7 மணி: மைலாப்பூர்
„ 7-45: திருவல்லிக்கேணி
„ 8-30: எழும்பூர்
„ 9-15: பேரம்பூர்
„ 10-00: பேசின்பிரிட்ஜ்
„ 10-45: வண்ணை

★

மேற்கண்ட இந்நிகழ்ச்சிகளைத் தவிர, நகரில் அறிவிக்கப்பட்ட வேறெந்த நிகழ்ச்சிகளிலும் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கலந்துகொள்ள மாட்டார். இதற்கு முன் அறிவிக்கப்பட்ட வேறெந்த நிகழ்ச்சிகளுக்கும் இந்த நிகழ்ச்சிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

இந் நிகழ்ச்சிகளில் தோழர் எம். ஜி. ஆர். அவர்களுடன் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் அ. பொன்னம்பலனார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தமிழக தேர்தல் முடிவுகள்

கழகம் பெற்றுள்ள வெற்றிகள்

கட்சிகளின் நிலை விளக்கம்

சென்னை, மார்ச் 5—

மார்ச் 1-ந்தேதி தேர்தல்கள் நடைபெற்ற தொகுதிகளில் 14 இடங்களில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. போட்டியில்லாமல் 3 காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி, இதுவரை 17 தொகுதிகளில் முடிவு தெரிந்திருக்கிறது.

இவற்றுள், போட்டியில்லாததால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மூவர் நீங்கலாக, மற்ற 14 தொகுதிகளில் காங்கிரஸ் மொத்தம் 10 இடங்களை மட்டும் கைப்பற்றியிருக்கிறது. மற்ற 4 இடங்களில் தி. மு. கழகம் 2 இடங்களையும், வேறு இரு சுயேச்சைகள் 2 இடங்களையும் கைப்பற்றியிருப்பதாக இன்று காலைவரையிலும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தெ. ஆ. மாவட்டம் வளவனூர், தொகுதியில் தி. மு. கழக அபேட்சகர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் சுமார் 15,000-த்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று காங்கிரஸ் அபேட்சகரைத் தோல்வியுறச் செய்தார்.

மொத்த வாக்காளர் 94,061;
பதிவான வாக்கு 51,971
ஏ. கோவிந்தசாமி (தி. மு. க.): 31,836
கே. எம். கிருஷ்ண கவுண்டர் (காங்). 16,256
பி. அழகப்ப கவுண்டர் (சுயேச்). 3,769
செல்லாதவை 110

வ. ஆ. மாவட்டம் போளூர் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. கழக அபேட்சகர் தோழர் களம்பூர் அண்ணாமலை அவர்கள் தம்மை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 10,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

மொத்த வாக்காளர் 82,019
பதிவான வாக்கு 40,090
அண்ணாமலை (தி. மு. க.) 17,222
டி. பி. கேசவ ரெட்டி (கா. சீ. க.) 10,616
வி. கிருஷ்ணகாந்தன் 7,613
வேதியப்ப முதலியார் (சுயே). 4,059
புருஷோத்தம முதலியார் (சுயே). 578
செல்லாதவை 2

★

மற்ற இடங்களில்...

சுயேச்சைகள் வெற்றி பெற்ற 2 இடங்களையும், தி. மு. கழக அபேட்சகர்கள் போட்டியிடாத 5 தொகுதிகளையும் தவிர்த்த மற்ற 5 இடங்களில் மட்டுமே காங்கிரஸ் தி. மு. கழக அபேட்சகர்களைவிட குறுகிய அளவு

(3-ம் கலம் பார்க்க)

சட்டசபைத் தேர்தல் பஞ்சப்பட்டி தொகுதி

பஞ்சப்பட்டித் தொகுதியில், தி. மு. கழக அபேட்சகரும் மற்றொரு அபேட்சகரும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவதால் காங்கிரசின் எதேச்சாதிகாரத்திற்கு மேலும் ஆதிக்கம் தருவதாகும் என்று தி. மு. கழகம் மனதார உணருகிறது. எனவே பஞ்சப்பட்டியில் தி. மு. கழக அபேட்சகராக நிற்கும், தோழர் வை. குழந்தைவேலு அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, அவர் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதற்கு மனமார இசைந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கோள்வதுடன், இதுவரையில் கழக அபேட்சகருக்காகப் பணியாற்றிய தோழர்கள் அனைவரும், காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை முறியடிக்கப்பாடுபடுமாறு கேட்டுக் கோள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க).

சனநாயகம் பற்றி தப்புப் பிரச்சாரம்

ஆளும் கட்சியினருக்கு அண்ணா எச்சரிக்கை

எதிர்க்கட்சியினரால் ஏதும் முடியாது என்றால் தேர்தல்கள் ஏன்?

"எதிர்க்கட்சியில், ஒரு சிலர் அமர்ந்திருப்பதினால் என்ன சாதித்து விட முடியும் என்று கேட்கின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்!

"எதிர்க் கட்சியினரால் எதுவுமே சாதிக்க முடியாது என்று கூறுவார்களேயானால், எவரும் செலவு செய்து ஒவ்வொரு ஐந்தாண்டிலேயும் ஏன் ஆட்சியிலிருப்போர் தேர்தல் என்ற ஒன்றை நடத்துகிறார்கள்?

"நான், ஆளும் கட்சியினருக்கு எச்சரிக்க விரும்புகிறேன்—'ஜனநாயகம் பற்றி தப்புப் பிரச்சாரம் செய்யாதீர்; தவறான கருத்துக்களைத் தெரிவிக்காதீர்'—என்று!

"எதிர்க்கட்சியில் அமர்ந்திருப்போர்—அவர்கள் சிலராக இருப்பினும் யோக்கியமானவர்களாயிருந்தால், திட்டவட்டமான கொள்கையுடையவர்களானால், பெரிய யானையை அடக்கும் அங்குசம்போல, ஆளும் கட்சியை கட்டுப்படுத்தி நடத்திச் செல்ல முடியும்.

"நாட்டில் இன்றுள்ள சூழ்நிலைகள், ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்துகின்றன; அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில், ஒரு நல்ல யோக்கியமான எதிர்க்கட்சி அமைய வேண்டும் என்ற தேவை மிக அதிகமாக உணரப்படுகிறது.

"இந்த எதிர்க் கட்சி அமைவது, எத்தனை திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அதனைப் பொறுத்ததாகும்; ஏனெனில், தி. மு. கழகத்தினர் மட்டுமேதான் தென்னாட்டின் நலன்களுக்காகப் போராடி வருபவர்கள்.

"எனவே வாக்காளர் பெருமக்கள், தங்கள் எதிர்காலத்தை உத்தேசித்து தி. மு. க. அபேட்சகர்களையே வெற்றிபெறச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்."

என்று அண்ணா அவர்கள், நேற்று சென்னை எழும்பூர் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

கூட்டத்தில், சட்டசபை அபேட்சகரான அன்பழகன் அவர்களும், மக்கள் சபை அபேட்சகரான பி. பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்றும் பலரும் பேசினர்.

கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்திருந்து அண்ணா அவர்களின் கருத்துரை கேட்டனர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

அதிக வாக்குகள் பெற்று வெற்றி அடைந்திருக்கின்றனர்.

கோடைக்கானல் தொகுதியில் நமது கழக அபேட்சகர் தோழர் வி. குருசாமியை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் சுமார் 4,000 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோலவேதான் துறிஞ்சாபுரம் தொகுதியிலும், மாணிக்கவேலர் அவர்கள், நமது கழகத் தோழர் முருகையன் அவர்களைவிட சுமார் 6,000 வாக்குகள் தான் அதிகம் பெற்றிருக்கிறார்!

இதுபோலவே மற்றுமுள்ள ஆடுதுறை, சங்கரி, திருவையாறு தொகுதிகளிலும் குறுகிய அளவு மெஜாரிட்டியிலேயே காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது.

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன் சுற்றுப்பயணம்

மார்ச்
6: சிதம்பரம், லால்பேட்டை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர் தொகுதிகள்.
7: கரூர் பாராளுமன்றத் தொகுதி, அரவக்குறிச்சி, மணப்பாறை தொகுதிகள்.
8: குளித்தலை தொகுதி.
9: மதுரை நகர்.

கே.ஏ. மதியழகன் சுற்றுப்பயணம்

★

மார்ச் 6: ஆத்தூர்
„ 7: மாலை 6-மணி குளித்தலை
இரவு 10-மணி கரூர்
„ 8: மதுரை
„ 9: மாலை கோவை
இரவு 10-மணி வெள்ளனூர்
„ 10, 11: கரூர், குளித்தலை பார்லிமெண்டரி தொகுதி

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத் சுற்றுப்பயணம்

5, 6—3—57 ஆகிய இரு நாட்களிலும் ஆத்தூர், இராசிபுரம், சேந்தமங்கலம், நாமக்கல், ஈரோடு, காங்கேயம், சென்னிமலை, அரவக்குறிச்சி ஆகிய தொகுதிகளில் அண்ணா அவர்களும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் சுற்றுப்பயணம் செய்வர்.

★★★★★★★★★★★★★★★★★

இந்திக்கு இடமளிக்கும் ஏக இந்திய ஏகாதிபத்தியதாசர்களுக்கா உங்கள் ஓட்டு?

★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★

இந்தித்திணிப்பை எதிர்த்துப் போராடும் தி. மு. க. அபேட்சகர்களுக்கே உங்கள் ஓட்டு!

★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—3—57 செவ்வாய்

வெற்றி நமதே!

தமிழ் நாட்டில் பொதுத் தேர்தல்கள் துவங்கி, இரு நாட்கள் வாக்குப் பதிவு நடைபெற்றுள்ளன. இந்த இரு நாட்களிலும், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் போட்டியிடும் தொகுதிகள் அனைத்திலும் வாக்குப் பதிவு, பொதுவாகவே மிகுந்த உற்சாகத்தோடு நடைபெற்றிருக்கிறது. தேர்தலில் தீர்ப்பளிக்கும் மக்கள் வேறெப்போதையும்விட இப்போது—இந்தத் தேர்தலின்போது, தமிழ் நாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டியிருக்கின்றனர். வடநாட்டு இதழ் ஒன்று தெரிவித்திருந்ததைப் போல, வாக்குப் பதிவு செய்வதில் மக்கள் காட்டிவரும் உற்சாகம், ஜனநாயக வளர்ச்சிக்கு மிகவும் உதவக்கூடியதாகும். ஜனநாயகக் கடமையை, தேர்தலில் பங்கு பெறவேண்டிய அவசியத்தை மக்களுக்கு உணர்த்தி, அவர்களுக்கு இந்த ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதில் எவருக்கும் தகராறு இருக்க நியாயமில்லை.

கழகத்தின் முயற்சி சிறிது சிறிதாக உரிய பலனை—வெற்றியைப் பெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். 'எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள்' என்று கேட்குமுன் முதலில், 'கட்டாயம் உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துங்கள்; ஏனோதானோ என்று இருந்துவிடாதீர்கள்; தேர்தல் என்பது நம்மில் ஒவ்வொருவருக்கும் பொறுப்புள்ள ஒரு விவகாரம்' என்று மக்களுக்கு விளக்கம் தரும் விரிந்த ஜனநாயக உள்ளத்தை, தி. மு. கழகம் மட்டும்தான் தமிழ் நாட்டில் பெற்றிருக்கிறது என்பதை, விருப்பு வெறுப்பற்ற நேர்மையான அரசியல் பார்வையாளர்கள் உணர்ந்தே இருக்கின்றனர். மற்றக் கட்சிகள் எல்லாம், குறுகிய கட்சி நலனையே பிரதானமாகக் கருதி வருகின்றனவே தவிர, நாட்டில் ஜனநாயக வளர்ச்சிக்கு மக்கள் பொறுப்புள்ளவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டவைகளாக இருக்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், சனநாயக வளர்ச்சிக்காக மக்களைத் தயாரிப்பதில் முன்னோடியாக விளங்குவதில் பெருமிதம்கொள்கிறது — அதையே முதல் பெரும் வெற்றியாகவும் கொள்வதில் தவறில்லை.

ஜனநாயகக் கடமை உணர்வோடு தேர்தலில் ஈடுபட்டுள்ள தி. மு. கழகம் வெற்றி தோல்விகளினால் தோன்றக்கூடிய உணர்ச்சிகளுக்கு இரையாகிவிடாது என்பதை நாம் கூறிப் பிறர் தெரிந்துகொள்ளத் தேவை இல்லை.

இன்னும் மூன்று நாட்களில் பல தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெற வேண்டியுள்ளது. அந்தத் தொகுதிகளில் உள்ள கழகத் தோழர்கள், ஜனநாயக ஆக்கத்திற்குத் தாங்கள் ஆற்றும் புனிதமான கடமையைக் கருத்தில் கொண்டு, தொடர்ந்து தீவிரமாக வேலைகளைக் கவனிக்கவேண்டும். எஞ்சியுள்ள சில மணி நேரங்களில்தான், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் தங்களது முழு ஆற்றலையும் திரட்டி, வாக்காளர் பெருமக்களைக் கழகத்திற்கு நல்ல வெற்றியைத் தேடித் தரச் செய்யவேண்டும். ஏற்கனவே வாக்குப் பதிவு நடைபெற்ற தொகுதிகளிலிருந்து தரப்படும் அதிகாரபூர்வமற்றதும் ஆதாரமற்றதுமான முடிவுகளுக்கும் செய்திகளுக்கும் அதிகமான முக்கியத்துவம் தந்து உணர்ச்சிகளைப் பெருக்கிக்கொண்டு, அவற்றிற்கு இரையாகி, செயல்படும் வேகத்திற்கு தடைவிதித்துக்கொள்ளக் கூடாது.

கழக அபேட்சகர்கள் பெறக்கூடிய வெற்றியைக் கண்டு பெரும் ஆர்ப்பாட்ட உணர்ச்சிக்கும், அதேபோல தோல்வியைக் கண்டு ஆயாச உணர்ச்சிக்கும் உள்ளத்தைப் பிறப்பிடமாக்கிக்கொண்டு வாக்குப் பதிவு நடைபெறவேண்டியுள்ள தொகுதிகளில் தோழர்களும் ஆதரவாளர்களும் ஆற்றவேண்டியுள்ள பொறுப்புள்ள அரும் பணிக்கு இடையூறு தேடக் கூடாது.

மேலும், வெற்றிகண்டு ஆர்ப்பரிப்பதும் தோல்வி கண்டு மனம் ஒடிவதும் ஜனநாயகக் கடமையாற்றுபவர்களுக்கு அழகல்ல; தேர்தல்கள் இன்னும் முடியவில்லை; அரைவாசிகூட முடியவில்லை. நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, சில 'அவசர சாமி'கள் தோழர்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிடத் தூண்டுவர். மாற்றார் எத்தனைதான் ஆத்திரமூட்டினாலும், கண்ணியம்—கடமை—கட்டுப்பாடு தவறாத தோழர்கள் என்றும்போல் இன்றும் நிறைகுடங்களாக இருக்கவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல்களில் மகத்தான வெற்றியைப் பெறப்போவது உறுதி என்பதை உணர்ந்துள்ள மாற்றார், அந்த நிலை ஏற்படவிடாது தடுக்கவேண்டும் என்பதற்காக மேற்கொண்டுள்ள எத்தனையோ இழிவான முயற்சிகளில் - உபாயங்களில் ஒன்றுதான், வாக்குப் பதிவு நடைபெற்றுள்ள தொகுதிகளில் ஓரிரண்டின் முடிவுகளைப் பிரமாதப்படுத்த நினைப்பதும்—என்பதை உணர்ந்து, கழகத் தோழர்கள், வாக்குப் பதிவு நடைபெறவேண்டிய தொகுதிகளில் எஞ்சியுள்ள பொன்னான நேரத்தைக் கழகத்தின் மகத்தான வெற்றியை உறுதி செய்வதற்குப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஓடுங்கள்! உழையுங்கள்! செயலாற்றுங்கள்! செம்மல்களே— செயலாற்றுங்கள்! வீண் வதந்திகளுக்கும் மாற்றாரின் புரட்டுகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் உங்கள் கவனத்தை ஈர்க்க விட்டுவிடாமல் செயலாற்றுங்கள்! வெற்றி நமதே!

திராவிட சமுதாயச் சிதைவுக்குக் காரணம் யார்?

தமிழகத்தின் உருக்குலைந்த வருங்காலம் குறித்து எம். எஸ். இராமசாமி எச்சரிக்கை

கடந்த 26-ந் தேதியன்று ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் சன்னதித் திடலில், ஸ்ரீவில்லிப்புத்தூர் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தோழர் எம். எஸ். இராமசாமி ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று தி. மு. கழகம் தீர்மானம் செய்ததிலிருந்து இந்த நாட்டிலிருக்கும் அரசியல் கட்சிகள் என்று பெயர் சூட்டிக்கொண்டிருக்கும் பல்வேறு கூட்டத்தாரும் தி. மு. கழகத்தைத் தாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். காரணம், இந்த நாட்டில் இதுவரை அரசியல் கட்சிகள் எதுவும் தேர்தலில் போட்டியிடாமல், தேர்தல், அரசியல் போலிகளின் ஏகபோக ஆதிக்கத்தில் இருந்து வந்ததேயாகும்.

"இந்த நாட்டின் ஒரே அரசியல் கட்சி—தேசிய நிறுவனம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான். அது இத்தனை நாளும் மக்களுக்கு அரசியல் அறிவை வளர்த்துக்கொண்டு தேர்தலில் ஈடுபடாமல் இருந்து வந்தது. இந்த நாட்டில் தேசிய உணர்ச்சியும் அரசியல் ஞானமும் தவறான விதத்தில் உணர்த்தப்பட்டிருந்த காரணத்தால், முதலில் மக்களுக்கு அரசியல் அறிவையும் தேசிய உணர்வையும் ஊட்டவேண்டிய மாபெரும் பொறுப்பை தி. மு. கழகம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

"இங்குள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்டு போன்றவைகள் உண்மையான அரசியல் கட்சிகள் அல்ல. காங்கிரஸ், 1947-வரை இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைப் படையாக இருந்தது; அதன் பிறகு விடுதலைப் படை என்கிற அந்தஸ்தும் போய், இன்று 'அரசியல் வியாபாரிகளின் லிமிடெட் கம்பெனி'யாகி, வடவர்களுக்குக் 'கமிஷன் ஏஜெண்டாக'வும் இருந்து வருகிறது.

"கம்யூனிஸ்டுக் கட்சி என்பதோ, சாதாரணமாகத் தொழிற்சங்கக் கொள்கைகளை வைத்துக்கொண்டு தொழிலாளர்களின் கூலி உயர்வு, போனஸ், வீடு வசதி முதலியனபற்றி அரசாங்கத்திற்கு மனுச் செய்வதும் தேர்தல் காலங்களில் தன்னை ஒரு அரசியல் கட்சியாக விளம்பரம் செய்துகொண்டு அதிலுள்ள சிலருக்குப் பதவி தேடித் தருவதும் தவிர வேறு எந்தக் கொள்கையும் அதற்குக் கிடையாது.

"திராவிட முன்னேற்றக் கழகம் இவைகளைப் போன்ற போலி அரசியல் கட்சியல்ல--வடநாட்டுக் கமிஷன் ஏஜெண்டுமல்ல. அது இந்த நாட்டின் தேசிய ஸ்தாபனம். ஒரு நாட்டு மக்களின் சமூக, பொருளாதார, அரசியலில் ஊடுருவி நின்று பணியாற்றி வருவது எந்தக் கட்சியோ, அதுவே அந்த நாட்டின் தேசிய ஸ்தாபனம்.

"உணவு, உடை, மொழி, பழக்க வழக்கம், பண்பாடு, மனோ நம்பிக்கை, சரித்திரம் முதலியன சமூகத்தின் உறுப்புக்களாகும். இவற்றில் எது சிதைந்தாலும் அது சமூகத்தின் சிதைவாகும். இவைகளை சிதையவிடாமல் பாதுகாக்க முனைவதே தேசிய உணர்ச்சியாகும்.

"இப்பொழுது கடந்த கால அரசியல் நடவடிக்கைகளை நினைவுபடுத்திக் கொள்வோம்; இந்த நாட்டில்—திராவிடத்தில் சமூக அங்கமான மொழி, கலை, பண்பாடு முதலியன சிதையத்தக்க காரியங்கள்-செயல்கள் யாரால் கையாளப்பட்டன — அதைத் தடுப்பதற்கு முயற்சித்தவர்கள்— அதற்காகப் போராடித் தியாகத் தழும்புகளை ஏற்றவர்கள் யார் என்பது தெரியவரும். இங்கு இந்தியைக் கட்டாயமாக நுழைத்துத் தமிழைச்சீர்குலைக்க முயன்றபோதும் தமிழகத்தின் சிறப்புக்குரிய வரலாறுகளை மறைத்தொழிக்க முயன்றபோதும், தி. மு. கழகம் தவிர துடித்தெழுந்து போராடியவர்கள் வேறு யார்? யாருமில்லை!

"சமூகம் என்பது எப்படி பல அங்கங்களோடு விளங்குகின்றதோ, அதுபோலவே பொருளாதாரமும் பல உறுப்புகளுடையதாகும். ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்த நாட்டின் இயற்கை வளம், செயற்கை வளம் என்கிற இரண்டு பிரிவில் அடங்கும். அவைகளை மக்களின் இன்பவாழ்வுக்குக் கொண்டுவந்து பயன்படுத்துவோர் பலதிறப்பட்டவராவர். அவர்களை, அறிவியல் தொழிலியல் என்னும் இரண்டு பிரிவில் கொண்டுவரலாம். அறிவியலின்கீழ் மூளை உழைப்பாளரும், தொழிலியலின்கீழ் உடலுழைப்பாளரும் இருப்பார்கள். இவர்கள் எல்லோராலும் வளர்க்கப்படுவதுதான் நாட்டின் பொருளாதாரம்—தேசியப் பொருளாதாரம்.

"இந்த நாட்டின் தேசியப் பொருளாதாரம் வடவர் ஏகாதிபத்தியம் தோன்றியபிறகு பெரிதும் சீர்குலைந்துவருகிறது. சமூக அங்கங்களும் சிதைக்கப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டுமானால் அரசாதிக்கம் நம் கையில் — இந்த நாட்டவரின் கையில் இருக்கவேண்டும் என்பதுதான் தி. மு. கழகத்தின் முழு முதல் கொள்கைகளாகும். இவ்வாறு தேசிய, சமூகப் பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது என்பதை, தி. மு. கழகம் தக்க ஆதாரங்களுடன் பலமுறை மெய்ப்பித்துக் காட்டி வந்துள்ளது-வருகிறது.

"கடந்த 10-ஆண்டு ஆட்சியில் ரூ. 9-ஆயிரம் கோடி செலவில் ஏற்படுத்திய அணைக்கட்டுகளாலும் நிறுவிய ஆலைகளாலும், வருங்காலத்தில் விவசாயம், தொழில் ஆகியவற்றில் அமெரிக்காவுக்குச் சமமாக வட இந்தியா விளங்கப்போகிறது. ஏற்கனவே அரசாதிக்கத்தாலும் உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தாலும் வடநாடு சிறப்பெய்தி இருக்கிறது. இந்த நிலையில் விவசாயச் சிறப்பும் தொழில் சிறப்பும் சேர்ந்தால் அது எத்தகையதாக இருக்கும் என்பதை நாம் சிந்தித்தால் சில நிமிடங்களில் உணர்ந்து கொள்ளலாம். வடநாடு எந்த அளவுக்கு வளர்கிறதோ அந்த அளவுக்குத் தென்னாடு தேயும் என்பதில் யாரும் ஐயப்பட இடமில்லை. இத்தகைய உருக்குலைந்த வருங்காலம் தென்னகத்தை எதிர்நோக்கி இருப்பதைத்தான் தி. மு. கழகம் உங்கள் மத்தியில் உள்ளத்துடிப்புடன் கூறிவருகிறது. இந்த அநியாய ஆட்சி முறையைத்தான் காங்கிரஸ் கம்பெனியார் வானளாவப் புகழ்கிறார்கள். தி.மு. கழகம் சொல்வதெல்லாம் சுத்தப்பொய் என்று காமராசரும் சொல்கிறார்!"

உற்பத்தியில் வேகமாம்!

ஐதராபாத், மார்ச் 4—

ஐதராபாத் நாணய உற்பத்தி நிலையத்திலிருந்து இந்தியாவின் பல பாகங்களுக்கும் 'நயா பைசா'க்கள் வாகன் கணக்கில் சென்று கொண்டிருக்கிறதாம்.

நாளொன்றுக்கு ஒரு இலட்சம் வீதம், சென்ற பத்து திங்களாக

குழப்பத்தைத் தரும் புதிய நாணயங்கள்!

மக்கள் கவனத்திற்கு ஒரு குறிப்பு

புதுடில்லி, மார்ச் 4—

இன்னும் சுமார் நான்கு வாரகாலத்திற்குள் இந்தியா தசாம்ச நாணய முறைக்கு மாறும். அதன்படி இப்போதுள்ள ரூபாய் இதே மதிப்புடன் இருந்துவரும்; ஆனால், தற்போது 64 பைசாக்களாகப் (காலணுக்களாக) பிரிக்கப்பட்டிருக்கிறதற்குப் பதிலாக 100 'நயா பைசா'க்களாகப் பிரிக்கப்படும்.

அதேபோல் இப்போதுள்ள எட்டணு, நான்கணு நாணயங்களும்—அரை ரூபாய், கால் ரூபால் மதிப்புடன் அப்படியே இருக்கும். 50 நயா பைசா, 25 நயா பையா தொகைகளுக்குச் சமமாக அவை செலாவணியாகும். ஆனல் இரண்டணுவும், அதற்குக் குறைந்த நாணயங்களும் 'நயா பைசா'வில், நேரான பதில் நாணயமில்லாமல் இருக்கும்.

திருத்தப்பட்டபடியுள்ள இந்திய நாணயச் சட்டத்தில் இப்போதுள்ள ஒரு பைசா (காலணு) நாணயத்துக்கு 1-9/16 நயா பைசா சம தொகையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் நடைமுறையில் நயா பைசா பின்னங்கள் கூடுமானமட்டிலும் நெருக்கமாயுள்ள முழு நாணயமாக (வடிவாக) ஆக்கிக் கணக்கிடப்படும்; $\frac{1}{2}$ நயா பைசாவும், அதற்குக் குறைந்த பின்னங்களும் விட்டுவிடப்படும்; $\frac{1}{2}$ நயா பைசாவுக்கு மேல் உள்ளவை ஒரு நயா பைசாவாகக் கணக்கிடப்படும். எனவே ஏதாவதொரு பேரத்தின்போது ஒரே ஒரு காலணு கொடுக்கவேண்டியதாக இருந்தால், அதற்குச் சரியான தொகை 2 நயா பைசாவாக இருக்கும்.

உதாரணமாக, ஒருவர் ஏதோ 12 சாமான்களை வாங்குவதாக இருந்து, அவரிடம் நயா பைசா நாணயங்கள் மாத்திரம் இருந்து, ஒவ்வொரு சாமானுக்கும் $1\frac{1}{2}$ - அணு விலையிருந்தால் மொத்த விலையைக் கணக்கிட, ஒரு சாமானின் விலையான $1\frac{1}{2}$ அணுவுக்குச் சமமான தொகை எதுவென்று பார்த்து அதை 9 நயா பைசாவை 12 கொண்டு பெருக்கி மொத்த விலையைக் கணக்கிடக்கூடாது. 12 சாமான்களுக்கும் இப்போதுள்ள நாணயப்படி விலையைக் கணித்து அதாவது $12 \times 1\frac{1}{2}$ 18 அணு 1-ரூபாய் 2 அணுவுக்குச் சமமான நயா பைசாத் தொகை எதுவென்று அட்டவணையில் பார்க்கவேண்டும். அதற்குச் சமமான தொகை 1 ரூபாய் 12 நயா பைசா.

இந்தப் பேரத்தில் இப்போதுள்ள நாணயப்படி பணம் கொடுப்பதற்கும், புதிய நாணயப்படி பணம் கொடுப்பதற்குமுள்ள வித்தியாசம் 0.5 'நயா பைசா'வாகும்—அதாவது, 112 நயா பைசா வியாபாரத்தில் 0.5 'நயா பைசா' வித்தியாசப்படுகிறது.

இவ்வாறு இந்த பேரத்தில் சொற்ப அளவில் இலாபமோ நஷ்டமோ அடைவதை வேறொரு பேரத்தில் அனேகமாய் ஈடுசெய்துவிட நேரிடலாமாம்!

எப்போதுமே ஒரு தரப்பார் நஷ்டமடையவும் மற்றொரு தரப்பார் தொடர்ந்து இலாபமடையவும் நேரிட வழியில்லையாம்!

அப்படியேற்பட்டால் அது அதிசய நிகழ்ச்சிதானும்; எனவே இது சம்பந்தமான கவலை இருக்கத்தேவையில்லையாம்!

'நயா பைசா' நாணயங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறதென்றும், மற்ற மதிப்பு நாணயங்கள் பம்பாய், கல்கத்தாவில் உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் தெரியவருகிறது.

புதுவை: சட்டபூர்வமாகக் கைவிட பிரெஞ்சுக்காரர் மறுப்பு!

பாரிஸ், மார்ச் 2—

பிரெஞ்சுக்காரர்களின் ஏகாதிபத்திய ஆசை தணிந்தபாடாக இல்லை!

புதுவை, காரைக்கால், மாகி, ஏனும் பகுதிகளை டில்லி சர்க்காரிடம் ஒப்படைத்துவிடுவது என்று கடந்த 1956 மே 26-ந் தேதியன்று டில்லியில் பிரெஞ்சு சர்க்கார் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஏற்க பிரெஞ்சு யூனியன் சபை மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

புதிய ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்று உறுப்பினர்கள் சிலர் கூறியுள்ள யோசனையை, சபை, பிறிதோர் நாள் பரிசீலிக்குமாம்.

இந்தச் சபை பிரெஞ்சு சர்க்காரைக் கட்டுப்படுத்தாது என்றும், இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட இந்தச் சபை வெறும் ஆலோசனை சபையாகவே இருக்கிறது என்றும், இது பிரெஞ்சு யூனியனைப் பொறுத்த எல்லா விவகாரங்களிலும் அபிப்பிராயம் தெரிவிக்கும் என்றும் கூறப்படுகிறது.

கிராமங்களில் புதுவாழ்வு பிறக்கிறதாம்!

இந்தியாவில் பல பகுதிகளிலும் புதிய முறையில் அமைக்கப்பட்டுள்ள 1,25,000 - க்கு மேற்பட்ட கிராமங்கள் இந்திய கிராம வாழ்க்கையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கி வருகின்றனவாம்.

★★★★★★★★★★★★★★★★★★★

அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★★

138 கிராமங்களுக்கு ஒளி வசதியாம்!

சென்னை, மார்ச். 2—

சென்னை மாநிலத்தில் 4 மின்சாரத் தொடர்களும் சேர்ந்து சனவரியில் 138 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழக மக்களுக்குப் பயிற்சியளிக்க இந்தத் திட்டம்?

டில்லிப் பேரரசிடம் சென்னை சர்க்கார் கையேந்துகிறது

சென்னை, மார்ச் 4—

காகிதத்தால் விளையாட்டுச் சாமான்களும் மற்றும் பவுடர் பெட்டிகள், சிகரெட்டுப் பெட்டிகள் போன்ற சாமான்களும் உற்பத்தி செய்வதில் பயிற்சியளிக்க இரண்டு நிலையங்களைக் கடலூரிலும் தஞ்சையிலும் நிறுவ அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம். நிலையத்தில் 16 பேர்களுக்குப் பயிற்சியும் மாதம் ரூ. 25 உதவி ஊதியமும் அளிக்கப்படுமாம்.

இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் ரூ. 40,660 தரவேண்டும் என்று சென்னை கேட்டுக்கொண்டுள்ளதாம்.

ரூ. 60 கோடி செலவில் வடக்கில் உருவாகும் ரூர்கேலா தொழிற்சாலை

வசதிகள் பல கொண்டதாக இருப்பதற்கு மேலும் பல திட்டங்கள்

புதுடில்லி, மார்ச். 4—

ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலைக்கும் அதற்கு அருகில் உருவாகி வருகிற நகர்ப் பகுதிக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்காக அத்தொழிற்சாலைக்கு அருகிலுள்ள சங்க நதியின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

சுமார் 1,50,00,000-த்திற்கு மேல் செலவாகக் கூடிய இந்த அணை இராகுட் திட்ட அதிகாரிகளால் கட்டப்படும்.

தொழிற்சாலைக்கு அருகிலுள்ள நகர்ப்பகுதியில் இதுவரையில் மொத்தம் 750 வீடுகள் மின்சார வசதி, தண்ணீர் வசதி முதலியவைகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 1000 வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன. 300 அறைகள் கொண்ட விடுதி ஒன்றும் அங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

ரூர்கேலா திட்டத்திற்கு 1956—57-ல் சுமார் ரூ. 20 கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் இச்செலவு ரூ. 60 கோடிக்கு அதிகரிக்கக்கூடுமாம்.

இத்தொழிற்சாலை சுமார் 7,20,000 டன் எடையுள்ள உருக்குத் தகடுகளைத் தயார் செய்யும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். இத்தகடுகள் கப்பல் கட்டும் வேலைகளுக்கும் இரயில் வாகன்கள் தயாரிப்புக்கும், மற்ற உபயோகங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

ஹங்கேரியில் இன்னும் புரட்சி

குடியரசுத் தலைவர் கருத்து

ஹங்கேரியில் இன்னும் எதிர்ப்புரட்சிக்காரர்கள் தீவிரமாகவே இருப்பதாகவும், எதிர்ப் புரட்சி அபாயம் இருக்கும்வரை அதனை அடக்குவதற்குக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஹங்கேரி குடியரசுத் தலைவர் கூறியிருக்கிறாராம்.

புதாபெஸ்ட் வானொலியில் பேசிய அவர், ரஷ்யாதான் ஹங்கேரியைக் காப்பாற்றியது என்றும் சொல்லியுள்ளாராம்.

ஜனசக்தியின் வழக்கமான பித்தலாட்டம்

கழகத் தோழர் தரும் விளக்கம்

கொண்ட கொள்கைக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் காவலர்களும் தொண்டர்களும் நிரம்பப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது எவ்வகையிலும் மாசு கற்பித்துவிட வேண்டுமென்ற கெடுநினைப்பில் ஒரே மூச்சாக இறங்கிப் பணியாற்றும் கம்யூனிஸ்டுகள் பலவகையான துஷ்பிரச்சாரங்கள் செய்து அவைகளின் மூலமாக—பொய்யும் புரட்டுக்களையும் மக்களிடம் எடுத்துக் கூறிவிடுவதின் மூலம் தங்கள் 'ஆசை'யை நிறைவேற்றிக் கொள்ள அரும்பாடுபட்டு வருகின்றனர். இவர்களுடைய பித்தலாட்டப் பொய்ப் பிரச்சாரங்களையும் கெடுநினைப்பையும் நாம் பலமுறை எடுத்துக்காட்டி விளக்கம் தந்தும்கூட தங்கள் 'அரசியல் அநாகரீக நெறி'யிலிருந்து கடுகளவும் பிறழாது 'கோயபல்ஸ்' பிரச்சாரத்திலீடுபட்டுவருகின்றனர்.

சென்ற வார 'ஜன சக்தி' இதழ், சென்னை திருவல்லிக்கேணி கழகத் தோழர் மா. பா. சாரதி அவர்கள், தி. மு. கழகத்தில் சர்வாதிகாரம் நடைபெறுவதாகவும் எனவே கழகத்தினின்றும் விலகிவிட்டார் என்றும் ஒரு 'வதந்தி'யைக் கிளப்பிவிட்டிருக்கிறது! அவரது பெயரால் வெளிவந்த அந்தச் செய்தியில் அத்தோழரது கழக உறுப்பினர் எண்ணை அடைப்புக் குறியில் தந்துவிட்டால் மக்கள் நம்பிவிடுவார்கள் என்ற அசட்டு நம்பிக்கையில் அதனையும் வெளியிட்டு 'ஆனந்தம்' அடைந்திருக்கிறது; 'ஜனசக்தி'! ஆனால் நமது கழகத் தோழர் இதனை மறுத்து 'ஜனசக்தி'யின் பித்தலாட்டங்களை விளக்கி நமக்குத் தந்துள்ள கடிதம் ஒன்றினை தருகிறோம்:—

"சென்ற வார 'ஜனசக்தி' இதழ் ஒன்றில், தி. மு. கழகத்தில் சர்வாதிகாரம் நடைபெறுவதாகவும், அதனால் அக்கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும் எனது பெயரால் வெளிவந்துள்ள செய்தி கேட்டுத் திடுக்குற்றேன். அம்மாதிரி எந்த நிகழ்ச்சியும் நடைபெற இல்லை என்றும், இச்செய்தி முழுவதும் பொய்யானதென்றும் இதன் மூலம் தங்களுக்கு அறிவிக்கிறேன். தேர்தல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இந்நேரத்தில் இம்மாதிரி வதந்திகளால் நம்மை அழித்துவிட எண்ணும் அவர்களது மனப்பாங்கு தூளாகும் என்பது உறுதி. என்றும்போல் எனது பணியினை இடையறாது செய்துவருவேன் என உறுதி கூறுவதுடன், பொய்யும் பித்தலாட்டமுமே கொள்கையாகக் கொண்ட இதுபோன்ற செய்திகளை யாரும் நம்ப வேண்டாம் என்று பொதுமக்களையும் கழக நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன்."

அன்பன்

மா. பா. சாரதி,

(திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பக செ. கு. உறுப்பினர். தி. மு. கழக உறுப்பினர் எண் 44394).

★★★★★★★★★★★★★★★★★★★

அடக்குமுறைச் சட்டங்களைத் தகர்க்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★

அதிகாரங்களைப் பரவலாக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★★

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன் சுற்றுப்பயணம்

கழகத் தோழர்களின் ஆர்வமிக்க வரவேற்புகள்

★

சோழவந்தான்:

26—2—57 காலை 11-15 மணிக்கு சோழவந்தான் தியேட்டரில் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 'தேர்தலில் நமது கடமை' என்பது குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

பள்ளப்பட்டி:

அன்று பகல் 12 மணியளவில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

பின்னர் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் சில குழந்தைகளுக்கு கலைவாணன், வீரமணி, நெடுஞ்செழியன், இன்பநாதன் எனப் பெயர்கள்சூட்டினர். இது நினைவாகத் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 6 தரப்பட்டது.

நிலக்கோட்டை:

பகல் 12½ மணியளவில் நிலக்கோட்டையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் 'தேர்தலில் நாம்' எனும் பொருள் குறித்து அரியதோர் விளக்கவுரையாற்றினர். பல கிளைக் கழகங்கள் சார்பில் புரட்சி நடிகர் அவர்களுக்குக் கைத்தறி ஆடைகள், மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

வத்தலக்குண்டு:

வத்தலக்குண்டு தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டார்.

பண்ணைக்காடு:

அன்று பிற்பகல் 2 மணிக்கு, பண்ணைக்காடு மலைமேல் நடைபெற்ற இரு பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொண்டு 'தேர்தலும் நமது கடமையும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர். அக்கூட்டத்தில் திரு. ந. சின்னன் அவர்களது ஆண்மகவுக்கு தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் 'இளவழகன்' எனப் பெயர் சூட்டினது நினைவாகத் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 5 அன்பளிப்பு தரப்பட்டது.

கெங்குவார்பட்டி:

மாலை 4 மணிக்கு, கெங்குவார்பட்டியில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி. ஆர்., எஸ். முத்து ஆகியோர் தி. மு. கழகத் தோழர்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினர்.

கம்பம், உத்தமபாளையம்:

மாலை 6 மணிக்கு நடைபெற்றக் கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பானதோர் உரையாற்றினர்.

ஓடைப்பட்டி:

இரவு 9½ மணிக்கு இங்கு நடைபெற்ற கூட்டத்தில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தி. மு. கழகத் தேர்தல் குறித்தும் வாக்காளர் கடமை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

வரவேற்புகள்

எலுமறம்பட்டி, புதுப்பட்டி ஆகிய கிராமங்களில் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்து ஆர்வத்துடன் தோழர் எம். ஜி. ஆர். அவர்களை வரவேற்று மலர் மாலை சூட்டினர்.

சின்னமனூர்:

இரவு 7 மணிக்கு இங்கு நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, அ. பொன்னம்பலனர், செந்தமிழ்ச் செல்வன் ஆகியோர் பேசினபின் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தி. மு. கழகச் சார்பில் நிற்கும் அபேட்சகர்களை ஆதரிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு உரை நிகழ்த்தினர்.

தேனி:

இரவு 7½ மணிக்கு, தோழியர் பி. எஸ். செல்வா குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் கூட்டம் ஆரம்பமானது. துவக்கத்தில் தோழர்கள் டி. வி. நாராயணசாமி, அ. பொன்னம்பலனர், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசினபின் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும் காந்தியவாதிகள் செய்துவரும் அக்கிரமங்களை எடுத்துக் கூறியும், கழகத் தோழர்களுக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

கூடலூர்:

27—2—57 பிற்பகல் 1-மணிக்கு கம்பம் பகுதி கூடலூரில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் கலந்துகொண்டார்.

தேனி தொகுதியில்

27-2-57 மாலை 3 மணியிலிருந்து இரவு 10 மணிவரையிலும் நாகலாபுரம், ஸ்ரீரங்கபுரம், கொடுவிலார்ப்பட்டி, வீரபாண்டி, கண்டமனூர், சக்கம்பட்டி, எழுமலை, சேடப்பட்டி, சாப்டூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இக்கூட்டங்களில்தோழர்கள்எஸ்.எஸ் இராசேந்திரன்,டி. வி. நாராயணசாமி, அ. பொன்னம்பலனர் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். பல இடங்களில் ஊர்வலங்களும் வரவேற்புகளும் நடைபெற்றன.

மதுரை

இரவு 12 மணிக்கு மதுரை திடலில் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினரின் 'சுமைதாங்கி' நாடகம் நடைபெற்றது. நாடக இறுதியில் தோழர் எம். ஜி. ஆர். அவர்களும் தோழர் எஸ். முத்து அவர்களும் நன்றி கூற, நாடகம் அதிகாலை 4 மணிக்கு முடிவுற்றது.

மேலூர் தொகுதி

28-2-57 காலை 11 மணி முதல் பகல் 12½ மணிவரையிலும் நடைபெற்ற ஒத்தக்கடை, யலையாளத்தன்பட்டி, சிட்டம்பட்டி, வெள்ளரிப்பட்டி, தெற்குத் தெரு, மேலூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆங்காங்கு கழகக் கொடிகளை ஏற்றிவைத்து புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும் தோழர்கள் எஸ். முத்து, அ. பொன்னம்பலனர் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

லால்குடி தொகுதி:

மாலை 4-30 மணி முதல் இரவு 7-30 மணிவரையிலும் பூவாளூர், பெருவளநல்லூர், வெள்ளனூர், சங்கேந்தி, புள்ளம்பாடி, கோண்டாகுறிச்சி, லால்குடி, சிறுதையூர் ஆகிய இடங்களில் நடை

(3-ம் கலம் பார்க்க.)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பெற்ற பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், வரவேற்புகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு தோழர் எ. பி. தர்மலிங்கம் அவர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டு எம். ஜி. ஆர். அவர்கள் பேசினர். தோழர்கள் எ. பி. தர்மலிங்கம், கந்தசாமி, அ. பொன்னம்பலனர் ஆகியோரும் பேசினர்.

★★★★★★★★★★★★★★★★★★★

சர்வாதிகார வெறியைத் தணிக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★★

மார்ச் 8. தேர்தல்கள்: களம் புகும் முன்னணி வீரர்கள்

ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், பி. பாலசுப்பிரமணியம், என். சீவரத்தினம், சத்தியவாணிமுத்து, ஜி. பி. சோமசுந்தரம், எம். பி. சுப்பிரமணியம் தொகுதிகளில் வாக்குப் பதிவு

தமிழகத்தில் துவங்கியுள்ள பொதுத் தேர்தல்களின் நான்காம் கட்டம் மார்ச் 8-ம் தேதியன்று துவங்குகின்றது. அன்று, பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்களின் தேர்தல் சின்னம், நமது தோழர்களை எதிர்த்துப் போட்டியிடுவோர் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன. தடித்த எழுத்துக்களில் உள்ளவை பாராளுமன்றத் தொகுதிகள்.

தொகுதிகள்	கழக அபேட்சகர்	சின்னம்	எதிர்த்துப் போட்டியிடுவோர்
சென்னை வடக்கு	....	......	....
1. வண்ணாரப் பேட்டை	என். சீவரத்தினம்	உதயசூரியன்	மாயாண்டி நாடார் (காங்); ஏ. எஸ். அய்யங்கார் (கம்); மற்றுமிரு சுயேச்சைகள்.
2. பேசின்பிரிட்ஜ்	என். வி. நடராசன்	உதயசூரியன்	அனந்தநாயகி (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்.
3. பெரம்பூர் (தனி)	சத்தியவாணிமுத்து	உதயசூரியன்	டி. இராசகோபால் (காங்); கருப்பண்ணன் (கம்); கே. பி. சாமுண்டீசுவரன் (சோஷ)
சென்னை தெற்கு	பி. பாலசுப்பிரமணியம்	உதயசூரியன்	டி. டி. கிருஷ்ணமாச்சாரி (காங்); மற்றொரு சுயேச்சை.
1. ஆயிரம்விளக்கு	ஏ. வி. பி. ஆசைத்தம்பி	உதயசூரியன்	கே. வேங்கடசாமி நாயுடு (காங்);
2. எழும்பூர்	க. அன்பழகன்	உதயசூரியன்	இராதாகிருஷ்ணன் (காங்); மற்றொரு சுயேச்சை.
3. தியாகராயநகர்	ஏ. எஸ். ஜேசுபாதம்	உதயசூரியன்	கே. விநாயகம் (காங்); மற்றொரு சுயேச்சை.
நாமக்கல் (பொது)	ஈ. வெ. கி. சம்பத்		
,, (தனி)	டி. வி. சுந்தரராசன்		
1. நாமக்கல் (பொது)	வி. காளியப்பன்	உதயசூரியன்	குழந்தை கவுண்டர் (காங்); கே. வி. இராமசாமி (கம்); மற்றொரு சுயேச்சை.
,, (தனி)	மருதைவீரன்	பூ	எம். பி. பெரியசாமி (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்.
2. சேந்தமங்கலம்	ஜி. பி. சோமசுந்தரம்	சேவல்	சிவஞானம் பிள்ளை (காங்).
3. இராசிபுரம்	கே. வி. கே. இராமசாமி	உதயசூரியன்	ஏ. இராசா கவுண்டர் (காங்).
4. ஆத்தூர் (பொது)	எம். பி. சுப்பிரமணியம்	உதயசூரியன்	ஏ. சாம்பசிவ ரெட்டியார் (காங்); இராமச்சந்திரன் (கம்); மற்றுமிரு சுயேச்சைகள்.
,, (தனி)	டி. இருசப்பன்	சேவல்	ஏ. துரைசாமி (காங்); சி. துரைசாமி (கம்); மற்றொரு சுயேச்சை.
5. அரவக்குறிச்சி	என். இரத்தினம்	உதயசூரியன்	எஸ். சதாசிவம் (காங்); மற்றொரு சுயேச்சை.
6. காங்கேயம்	முத்து	உதயசூரியன்	கே. ஜி. பழனிசாமி கவுண்டர் (காங்); மற்றொரு சுயேச்சை.
7. சென்னிமலை	எஸ். கே. சுந்தரம்	உதயசூரியன்	தங்கப்ப கவுண்டர் (காங்); நல்லசிவம் (சோஷ).
சிதம்பரம் (பொது)	குழந்தை		
,, (தனி)	புலவர் ஆறுமுகம்		
1. கள்ளக்குறிச்சி (பொது)	சி. நடராசன்	உதயசூரியன்	பார்த்தசாரதி (காங்); மற்றொரு சுயேச்சை.
,, (தனி)	எம். ஆனந்தன்	யானை	எல். ஆனந்தன் (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்.
2. விருத்தாசலம்	எம். செல்வராஜ்	உதயசூரியன்	இராஜவேல் படையாச்சி (காங்); மற்றும் 5 சுயேச்சைகள்.
3. புவனகிரி	ஆர். பாலகுருசாமி	உதயசூரியன்	சாமிக்கண்ணு படையாச்சி (காங்); டி. எம். சோமசுந்தரம் (கம்); மற்றும் இரு சுயேச்சைகள்.
4. சிதம்பரம் (பொது)	பொன். சொக்கலிங்கம்	உதயசூரியன்	ஜி. வாகீசம் பிள்ளை (காங்); மற்றுமொரு சுயேச்சை.
இராமநாதபுரம்	....	......	....
1. சிவகெங்கை	வி. வீரப்பன்	உதயசூரியன்	சாமிநாதன் (காங்); எஸ். நாராயணன் (கம்); டி. சுப்பிரமணிய-ராஜ்குமார் (கா.சீ.க.); மற்றுமிரு சுயேச்சைகள்.
2. திருவாடானை	இராம. வெள்ளையன்	உதயசூரியன்	எஸ். இராமகிருஷ்ண தேவர் (காங்); மற்றும் 3 சுயேச்சைகள்.
திருநெல்வேலி	....	......	....
1. தூத்துக்குடி	எம். எஸ். சிவசாமி	உதயசூரியன்	பொன்னுசாமி (காங்); எஸ். ஏ. முருகானந்தம் (கம்).
2. ஸ்ரீவைகுண்டம்	ஜெகவீரராசேந்திரன்	உதயசூரியன்	ஏ. பி. சி. வீரபாகு (காங்); மற்றும் இரு சுயேச்சைகள்.

★

தி. மு. கழக ஆதரவாளர்

திருநெல்வேலி (பொது)	டி. கந்தையா	பூ	இராசாத்திகுஞ்சிதபாதம் (காங்); முகம்மது இஸ்மாயில் ராவுத்தர் (பி. சோ.); மற்றும் 5 சுயேச்சைகள்.

தேர்தல் கூட்டங்கள்

வண்ணை:

6—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை மணிகண்ட முதலிதெருவில், கோணித் தையல் தொழிலாளர் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் டி. எஸ். வேலின் தலைமையில் நடைபெறும். தோழர்கள் அன்புரோசு, ஜோசப் பாண்டியன், பி. கே. மூர்த்தி, தமிழழகன், சத்தியநாதன் ஆகியோர் பேசுவர். தோழர் இராதாமாணிக்கம் இயக்கப் பாடல் பாடுவார்.

இராயப்பேட்டை:

6—3—57 இரவு 7 மணிக்கு, சென்னை — இராயப்பேட்டை சீனிவாசபுரம் 2-வது தெருவில் 37-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் கூட்டம் தோழர் போ. ஏழுமலை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். நாராயணன், ஆர். எஸ். பாண்டியன், கோ. இளவரசு, போ. நா. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

கீழ்ப்பாக்கம்:

6—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை—கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு எரி திடலில் தி.மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் ஏ. பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசுவர். நடிப்பு-இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி கலந்துகொள்வார்.

கோடம்பாக்கம்:

5—3—57 மாலை 5-30 மணியளவில், சென்னை—கோடம்பாக்கம் சிங்கார கிராமணி திடல் (கோடம்பாக்கம் பஸ் நிலைய அருகில்) தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் சா. வில்லவன் தலைமையில் நடைபெறும். புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், தோழர்கள் பி. ஆர். கோகுலகிருட்டிணன், கோ. கிருட்டிணமூர்த்தி, க. இளங்கிரன், சே. இளஞ்செழியன், கே. பி. நாயகமணி, தரணி ஆகியோர் பேசுவர்.

மவுண்ட்ரோடு:

6—3—57 இரவு 8 மணிக்கு, சென்னை — மவுண்ட்ரோடு பைராங்கள் பகதூர் தெருவில் (மிட்லண்டு தியேட்டர் எதிரில்) தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் சி. கனகு தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

ஆயிரம்விளக்கு:

6—3—57 மாலை 6-30 மணியளவில், சென்னை — ஆயிரம் விளக்கு குலாம் அப்பாஸ் அலிகான் 7-வது தெருவில், தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி, ஆசைத்தம்பி, ஆர். எஸ். பாண்டியன், ஏ. கே. வில்வம் ஆகியோர் பேசுவர்.

சென்னை—இராயபுரம்:

6—3—57 மாலை, சென்னை—வண்ணை தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். சீவரத்தினம் அவர்களை ஆதரித்து இராயபுரம் கவுஸ்மொகிதீன்பேட்டையில் தோழர் எம். ஏ. சாமி தலைமையிலும், பின்னர் புது வண்ணை ஆலூர் முத்தையா முதலி தெருவிலும், இறுதியில் தண்டையார்பேட்டை சேனியம்மன் கோயில் தெருவிலும் நடைபெறும்பொதுக் கூட்டங்களில் தோழர்கள் புரட்சிதாசன், எம். சத்தியநாதன், அன்புரோசு, வி. டி. அரசு, இராமச்சந்திரன் ஆகியோர் பேசுவர்.

வரதராசபுரம்:

6—3—57 மாலை 6-30 மணியளவில், சென்னை—வரதராசபுரம் எஸ். ஐ. ஆர். ஐஸ்பாக்டரி அருகில் 31-வது வட்ட தி. மு. கழகத் தொண்டர் குழுச் சார்பில் தேர்தல் கூட்டம் தோழர் வி. பி. எஸ். மணியர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், க. அறிவழகன், அறிவுடைநம்பி, மா. செங்குட்டுவன் ஆகியோர் பேசுவர்.

குறிப்பு: இரவு 10 மணிக்கு, தோழர் மு. கருணாநிதியின் 'உதயசூரியன்' நாடகம் நடைபெறும்.

கள்ளக்குறிச்சி:

6—3—57 இரவு 8 மணிக்கு, கள்ளக்குறிச்சி வள்ளுவர் திடலில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும். புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், தோழர்கள் அ. பொன்னம்பலனார், என். எஸ். நாராயணன், மு. பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

குறிப்பு: மாலை 6 மணிக்கு, கள்ளக்குறிச்சி உயர்நிலைப்பள்ளி முன்பிருந்து ஊர்வலம் புறப்பட்டு, கூட்டத்தை வந்தடையும்.

தேர்தல் ஊர்வலங்கள்

★

சென்னை—பெரம்பூர்

6-3-57 பிற்பகல் 2 மணிக்கு சென்னை—பெரம்பூர் தொகுதியில், கான்ரான்ஸ்மித் நகர் திரு. வி. க. திடலிலிருந்து மாபெரும் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, வளையாபதி முத்துகிருஷ்ணன் ஆகியோர் அணிவகுத்து வருவர். மேற்படி தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள், படிப்பகங்களைச்சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் சைக்கிள்களுடன், அன்று பிற்பகல் 1 மணிக்கே திடலுக்கு வந்துவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பேசின்பிரிட்ஜ் தொகுதி

6-3-57 மாலை 6½ மணிக்கு சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை காசி விசுவநாதர் கோயில் அருகிலிருந்து தேர்தல் ஊர்வலம், பாண்டுவாத்தியங்கள், நாதசுர இசையுடன் புறப்பட்டு தோழர் என். வி. நடராசன் தலைமையில் 8-வது வட்டத்தில் உள்ள எல்லா தெருக்களிலும், 5, 7, 16, 29 ஆகிய வட்டத்திலுள்ள முக்கியத் தெருக்கள் வழியாக வலம்வரும்.

இவ்வூர்வலத்தில் திருமதி அனந்தராமன் பி.ஏ., மற்றும் மகளிர் மன்றத் தோழியர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

திருநெல்வேலி, மார்ச் 5—தூத்துக்குடி டேவிஸ்புரம் கிராம முன்சீப் வி.எம். ஆறுமுகம் பிள்ளை கொலைவழக்கின் விசாரணை முடிந்துவிட்டது. தீர்ப்பு 11-ந் தேதி அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாணவர் மன்றத் தேர்வு

9—3—57 அன்று நடைபெற விருந்த மாணவர் மன்றப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு, சென்னை மாநில பொதுத் தேர்தலை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டு 16—3—57-ல் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஒருவரே இரு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தல் கமிஷனருக்கு அறிவித்துவிட வேண்டும்; அவ்வாறு அறிவிக்காவிடில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையில் மட்டுமே அவர் உறுப்பினராக இருப்பதாக அறிவிக்கப்படுவார்; மற்ற உறுப்பினர் பதவி காலாவதியாகிவிட்டதாக அறிவிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.